O.S.No.2/2009

26.06.2019

**வா.சா.1 திருப்பதி என்பவர் ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**3ம் பிரதிவாதி தரப்பில் கு.வி தொடர்ச்சி**

1ம் வாதிக்கு 2014ல் திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்தை என் அப்பா தான் பெண் பார்த்து நடத்தி வைத்தார். எனக்கு 2015ல் திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்தையும் என் அப்பா தான் பெண் பார்த்து நடத்தி வைத்தார். என் அப்பா, அம்மா நாங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்து வருவதில் என் அப்பா தான் இப்போது வரை கர்த்தாவாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். 15.10.2008ம் தேதியன்று எனக்கும் என் சகோதரருக்கும் வாசாஆ3 வழக்கறிஞர் அறிவிப்பை 3ம் பிரதிவாதி அனுப்பி வைத்ததாக அறிவிப்பு அசலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.172/08 வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக நாங்கள் உள்ளோம் என்றால் சரிதான். 15.10.2008ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பை இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி மற்றும் அ.வ.எண்.172/2008 வழக்கின் வாதி வழக்கறிஞர் அனுப்பி வைத்த அறிவிப்பை நானும் என் சகோதரரும் பெற்றுக்கொள்ளாமல் Unclaimed என திருப்பப்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதிக்கு அனுப்பப்பட்டு திருப்பப்பட்ட Unclaimed மேற்குறிப்பிட்ட தபால் கவர் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது பிவாசாஆ1. எனக்கு அனுப்பப்பட்டு திருப்பப்பட்ட Unclaimed மேற்குறிப்பிட்ட தபால் கவர் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது பிவாசாஆ2. பிவாசாஆ1, பிவாசாஆ2 திருப்பி அனுப்பப்பட்ட போதிலும் வாசாஆ3 அசலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ3 அறிவிப்பானது என் அப்பாவிற்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வந்த அறிவிப்பை வைத்து தான் வாசாஆ4 பதில் அறிவிப்பினை அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

வாசாஆ4 அறிவிப்பை அனுப்பி வைத்த வழக்கறிஞரை எனக்கு தெரியாது. மேற்படி வழக்கறிஞர் தான் என் அப்பாவிற்காகவும் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். எங்களின் வழக்கறிஞர் பெயர் ரவிசந்திரன். அவர் அலுவலக முகவரி தெரியாது. என் அப்பா தான் எனக்கு உடனிருந்து அறிவிப்பு அனுப்புவது இவ்வழக்கை தாக்கல் செய்வது எல்லாம் செய்து வருகிறார் என்றாலும் எனக்கு இவ்வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. என் அப்பாவிடம் சிட்பண்ட் விபரம் பற்றி கேட்டேனா என்றால் வழக்கு வந்த பிறகு கேட்டேன். இவ்வழக்கின் அடமானபத்திரங்கள் பற்றிய விபரங்கள் எப்படி தெரியும் என்றால் அ.வ.எண்.172/2008 வழக்கு வந்த பிறகு தெரிந்து கொண்டேன். அதற்கு முன்னர் எனக்கு தெரியாது. அதன் பிறகாவது அடமானபத்திரங்கள் 2ன் நகல் எடுத்துப்பார்த்தேனா என்றால் இல்லை. 31.05.2002ம் தேதிய ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 14.04.2008ம் தேதிய ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இதுவரை மேற்படி இரண்டு ஒப்பந்தங்கள் சம்பந்தமாக என் அப்பாவிடம் நான் கேட்டு எதுவும் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் என் அப்பா எந்த சிட்பண்ட் தொழிலும் செய்துவரவில்லை என்றாலும் நான் இவ்வழக்கிற்காக செய்துவருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய நிரூபன வாக்குமூலத்தில் கடன் தொகையை சீட்டு தொழிலுக்காக வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அத்தொகையை கடன் வாங்கியதற்கான ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றாலும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். தபசில் 9 முதல் 13 அயிட்ட சொத்துக்களை பொறுத்து அடமானத்தின் பெயரில் மொத்தம் ரூ.6,40,000/-த்தை 3ம் பிரதிவாதியிடம் பெற்றதாக 1ம் பிரதிவாதியான என் அப்பா கூறியுள்ளார் என்பது என்ன அடிப்படையில் சொன்னார் என்பது எனக்கு தெரியாது. நானும் அதை கேட்டுக்கொள்ளவில்லை. அ.வ.எண்.172/2008 வழக்கிற்கு பின்னர் சொன்னார். நான் என்னுடைய நிரூபன வாக்குமூலத்தில்

ரூ.6,40,000/- செலுத்துவதாக சொல்லியிருப்பது 2 அடமானப்பத்திரங்களின் கீழ்கண்ட தொகை 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின் முன்தொகை ரூ.2,00,000/- அதன் பின்பு 3 தேதிகளில் மேற்படி கிரைய ஒப்பந்ததிற்காக பகுதி வரவாக கொடுக்கப்பட்ட ரூ.40,000/- இவை எல்லாம் சேர்த்து தான் மேற்படி தொகை ரூ.6,40,000/- என்றால் ரூ.6,40,000/- மட்டும் என்பது எனக்கு தெரியும். அந்த தொகை எவை எவை உள்ளடக்கியது என எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் அ.வ.எண்.172/2008ன் பிராதிலும் மேற்படி 2 அடமானப்பத்திரங்களின் கீழ்கண்ட தொகை ரூ.4,00,000/-. 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின் முன்தொகை ரூ.2,00,000/- அதன் பின்பு 3 தேதிகளில் மேற்படி கிரைய ஒப்பந்ததிற்காக பகுதி வரவாக கொடுக்கப்பட்ட ரூ.40,000/-. ஆக மொத்தம் ரூ.6,40,000/- என சொல்லியுள்ளதற்கு மறுப்பு தெரிவித்து பதில்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிடமும் மேற்படி தொகை எவ்வாறு வந்தது என நான் இதுவரையில் கேட்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா 08.10.2001ல் பிராது 13 அயிட்ட சொத்தைப்பொறுத்தும் 5வது அயிட்ட கிணறு பம்புசெட் வகையறாவில் பிரிவினையில்லாத பாதிப்பாகத்தை பொறுத்தும் ரூ.2,00,000/-த்திற்கு பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் ரூ.2,00,000/-த்திற்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 31.05.2002ல் பிராது தபசில் 9 முதல் 11 அயிட்ட சொத்துக்களையும் 12வது அயிட்டத்தில் பிரிவினையில்லாத கிணறுபம்புசெட்வகையறாவின் பாதிபாகத்தை 12சதவீத வட்டியோடு ரூ.2,00,000/-த்திற்கு 5வருட தவணைக்கு அடமான பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 31.05.2002ல் என் அப்பா 3ம் பிரதிவாதிக்கு மேற்படி 2 அடமானத்தின் கீழ்கண்ட சொத்துக்களை அடமான தொகை ரூ.4,00,000/-த்திற்கு கொடுக்கவேண்டிய வட்டிக்கு ஈடாக பிராது தபசில் 9 முதல் 13 அயிட்ட சொத்துக்களை 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் ஒப்படைத்து அவர்

சாகுபடி செய்து அவரே என் அப்பா பெயரில் தீர்வை செலுத்தி 5 ஆண்டுகளுக்கு அனுபவித்து வருவதாக எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி 31.05.2002 ஒப்பந்தப்படி பிராது தபசில் 9 முதல் 13 அயிட்ட சொத்துக்களை கரும்பு முதலான பொருட்களை சாகுபடி செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் தரணி சுகர்ஸ் என்ற நிறுவனத்திற்கு கரும்பை விலைக்குகொடுத்து அந்த வெட்டுக்கட்டைடையை தொடர்ந்து பயிர் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது தபசில் சொத்து அத்தமங்கலம் கிராமத்தில் உள்ளது தெரியும். நான் நேரில் சென்று பார்த்தது கிடையாது. அந்த நிலங்களில் என்னென்ன சாகுபடி செய்யப்பட்டு வருகிறது அது யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அப்பா 2008 ஏப்ரல் 2வது வாரத்தில் மேற்படி சொத்துக்களை 3ம் பிரதிவாதிக்கு கிரையம்செய்து கொடுப்பதாக சொன்னதற்கு 3ம் பிரதிவாதியும் அதை ஏற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு ஏற்றுக்கொண்டதன்படி பிராது 9 முதல் 13 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதியும் 3ம் பிரதிவாதியம் கிரைய தொகை ரூ.13,00,000/- லட்சம் என பேசி 14.04.2008ம் தேதியன்று கிரைய ஒப்பந்தம் ஒன்று எழுதிக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஒப்பந்தத்திற்கு முன்தொகையாக ரூ.2 லட்சம் பணத்தை அதே தேதியில் என் அப்பா 3ம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் என் அப்பா, வாதிகளாகிய எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு வந்து கிரையம் பதிந்து கொடுத்து அசல் ஆவணங்களை ஒப்படைப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்படி 31.01.2009ம் தேதி தவணைக்குள் பாக்கி கிரைய தொகையை செலுத்தி என் அப்பா கிரையம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.